தனிப்பிரதி ரூ.௫/-
ஆண்டு சந்தா ரூ.௫0/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




MONTHLY

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜூனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 62
தலைப்பு : விசுவாசி – Believer
வேத வாசிப்பு : எபே.1:13

1. பிரசங்கத்தினாலே விசுவாசிகளை - 1கொரிந்தியர் 1:21
2. நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு- ரோமர் 13:11
3. விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம் - எபேசியர் 1:13


**G-Pay & PhonePe - 9443558041**

மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu





'ஒரே வழி' தபால் வழி வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 25 பிப்ரவரி -2025 கனி - 3


ஆசிரியருரை

## பாவம் எப்படி நிவர்த்தியாகும்?
## How is Sin Purged?



**த**ன்னுடைய பாவத்தைப் போக்க மனிதன் பல வழிகளை கையாளுகிறான். உயர்ந்த மலைகளுக்கும், கடல்களுக்கும், ஆற்றுஓரங்களிலும் சென்று தன்னுடைய பாவத்தை போக்க முயற்சிக்கிறான். இதனால் அவனுடைய பாவம் போகும் என நம்புகிறான். ஆனால் அவனுடைய பாவத்தை அவனே கழுவமுடியாது என்பதை அறியாது வீணாக பிரயாசம் கொள்ளுகிறான். பாவத்தைப் போக்கும் வழியை பரிசுத்த வேதாகமம் தெளிவாக நமக்குப்போதிக்கிறது. "கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்" (நீதி.16:6).

கிருபை என்பது இரக்கம். சத்தியம் என்பது உண்மை. தேவன் சத்தியபரர். தேவன் கிருபையாய் இரங்கி நம்மை இரட்சிக்கும்போது பாவம் நிவிர்த்தியாகும். இதினால் நடைபெறுகிற காரியம் என்ன? மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள். நாடும் வீடும் நலமாக இருக்கும். இந்த கிருபையையும் சத்தியத்தையும் நாடாதபடியால் நாடும் வீடும் சண்டையிட்டுக்கொண்டே இருக்கிறது. பாவமும் தேசத்தில் பெருகிக்கொண்டே இருக்கிறது. வளர்க்கவேண்டிய சத்தியத்தை தேசம் நோக்கிப்பார்க்கவேண்டும். ஒரு நாடு மற்றொரு நாட்டோடு சண்டை இடுவதற்கான ஆயத்தப்பணிகளை செய்கிறது. பாவம் பெருகியிருக்கிறதை உணரவில்லை. "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). கிருபைக்கும் சத்தியத்திற்கும் மூலகாரணமாயிருப்பவர் ஆண்டவர் இயேசு. இவர் மூலமாகவே தேவன் உலகத்தை இரட்சிக்க திட்டம் கொண்டார்.

"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (ரோம.5:12). எப்படி மனுஷனுடைய உடலில் ஒரு பகுதியில் நோய்கிருமிகள் தொற்றிக்கொண்டு உடல் முழுவதிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறதோ அதைப்போல முதல் முதலாக தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷன் மூலமாக பாவம் உள்ளே பிரவேசித்து மரணத்தை உண்டாக்கியது.

இந்த பாவத்தை போக்க, பரம வைத்தியராகிய தேவன் ஏசாயா தீர்க்கன் மூலமாக சொல்லும்போது; "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர்

சொல்லுகிறார், உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்'' என்கிறார் (ஏசா.1:18). எப்பேர்ப்பட்ட பாவியையும் அவன் மனந்திரும்பும்போது; கர்த்தர் மன்னிக்கவும் அவனுடைய பாவத்தை கழுவவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். இன்றே உங்களுடைய பாவங்கள் கழுவப்பட சத்தியபரராகிய இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். ''பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்'' (ரோம.6:23).

பாவத்திற்கு கீழ்ப்படிந்த ஆதாம் மரித்தான். பாவம் ஒரு மனிதனுக்கு பரிசாக மரணத்தை மட்டுமே கொடுக்கமுடியும். ஆனால் சத்தியத்திற்கு ஒருவன் கீழ்ப்படியும்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளமுடியும். ''ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது'' எனக் காண்கிறோம் (ரோம.5:21). நீங்கள் எந்த ஆளுகைக்குள் இருக்கின்றீர்கள்? பாவத்தின் ஆளுகைக்குள்ளா? அல்லது கிருபையின் ஆளுகைக்குள்ளா?

கிருபை என்று பார்க்கும்போது, ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' என வாசிக்கிறோம் (யோவா.3:16). இயேசுவை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய வாழ்வை அடையவேண்டும் என்பதற்காக அவரைத் தந்தருளினார். பாவத்தில் இருக்கும் மனிதனை மீட்க பாவமற்ற பரிசுத்தரை கொடுத்து தேவன் நம்மீது அன்புகொண்டார். இந்த அன்பு எப்படிப்பட்ட அன்பு? ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்'' (ரோம.5:8). இந்த அன்பை நீங்கள் புரிந்துகொள்வீர்களானால் பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைப்பீர்கள்.

தேவன் நமது சிருஷ்டிகராயிருக்கிறார். அவராலே மனுஷன் ஆதியிலே சிருஷ்டிக்கப்பட்டான். தேவனுடைய சாயலாகவும் மனுஷன் இருக்கிறான். ஆனபடியால் தேவன் உலகத்தில் உள்ள எல்லாவற்றைக்காட்டிலும் மனுஷனை அவர் நேசித்தார். மனுஷன் தேவனுடைய ஆவியைப் பெற்றபடியினாலே, அவன் மரித்தபின்பு அவனுடைய ஆவி தன்னைத்தந்த தேவனிடத்தில் செல்லுகிறது. இதை நீங்கள் அறிவீர்களா?

கர்த்தருடைய இரக்கத்தினாலே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என பவுல் தீத்துவுக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம். ''தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக...''. தேவனுடைய கிருபை ஒரு மனிதனை நீதிமானாக்குகிறது. எந்த ஒரு மனிதனும் தேவனுடைய கிருபையில்லாமல் நீதிமானாக முடியாது. சிலர் சொல்ல கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் மிகவும் நல்லவர் என்று சொல்லுவார்கள். அவர் நல்லவரா அல்லது கெட்டவரா என்தை தீர்மானிக்கவேண்டியவர் தேவன். தேவன் ஒருவரே மனுஷனை அறிவார், மற்றொருவரும் அறியார்கள். இரட்சிப்பு தானாக ஏற்படுவதில்லை; ''தேவனோ

இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே.2:4,5). நாம் இரட்சிக்கப்பட்டது அவருடைய கிருபையினால் உண்டானது. நம்முடைய நீதியினாலோ அல்லது நற்காரியங்களினாலோ நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பதை இவ்வசனங்கள் நமக்கு போதிக்கிறது. அநேகர் நற்கிரியைகளைச் செய்தால் புண்ணியம் கிடைக்கும் மோட்சம் கிடைக்கும் என்று பலவிதமான தான தர்மங்களைச் செய்கிறார்கள்.

அவைகளை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் செய்யவேண்டும். ஆனால் அந்தவிதமான தான தர்மங்களோ அந்த மனிதனை இரட்சிக்க முடியாது என்பதை புரிந்துகொள்ளுங்கள். பாவத்திலே கிடக்கிற மனுஷனை பரிசுத்த ஆண்டவர் இயேசுவின் இரத்தம் மாத்திரமே கழுவ வல்லது. எந்த ஒரு மனிதனும் தன்னைத்தானே கழுவிக்கொள்ளமுடியாது. எந்த மனுஷனும் நல்லவன் அல்ல. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என வேதம் போதிக்கிறது. ஆகையால், "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என பவுல் நமக்கு தெளிவு படுத்துகிறார் (எபே.2:8).

பாவத்தைக்குறித்தும், கிருபையைக்குறித்தும் பார்த்தோம். இனி சத்தியத்தைக்குறித்து தியானிப்போம்; சத்தியம் சத்தியம் என்று எங்கும்பேசப்படுகிறது. இயேசு சொல்கிறார்; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று (யோவா.14:6). இந்த சத்தியபரராகிய இயேசுவை ஒருவர் அறியாமல் பாவத்திலிருந்து விடுதலையடைய முடியாது. இவர் ஒருவரே பாவத்திற்கான பரிகாரி.

பாவத்தில் கிடக்கும் ஒருவரை, பாவத்தில் ஜீவித்துக்கொண்டு இருக்கும் அல்லது அந்த பாவியைப்போல பாவமுள்ள உலகத்தில் இருக்கும் எந்த ஒருமனிதனால் மீட்க முடியாது. ஏனெனில் அவனும் பாவத்தில் இருக்கும் ஒரு பாவியாக இருக்கிறான். சேற்றில் விழுந்து கிடக்கும் இருவரை கரையில் இருக்கும் ஒருவர் மட்டுமே காப்பாற்ற முடியும். சேற்றில் கிடக்கும் இருவரில் ஒருவன் மற்றொருவனை காப்பாற்ற முடியாது அல்லவா! அதைப்போல பாவத்தில் வீழ்ந்துகிடக்கும் ஒரு பாவியை மீட்க பாவமில்லாத இடத்திலிருந்து வந்த பாவமில்லாத இயேசுவாலே முடியும். ஆகையால், "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவா.2:2). பாவத்தைப்போக்கும் பலியாக இயேசுவை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவர் சர்வலோகத்தின் பாவத்தையும் போக்கும் பலியாக இருக்கிறார்.

இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானகன் இவரைக்குறித்து சொல்லும்போது; "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான் (யோவா.1:29). ஆட்டுக்குட்டிகள் மனிதனுடைய பாவத்தைப்போக்க முற்பிதாக்களின் காலங்களில் பலியாக செலுத்தப்பட்டு வந்ததை நாம் அறிவோம். ஆகையால் யோவான்ஸ்நானன் சொல்லும்போது; உலகத்தின்

பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான். ஆம், அவர் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி. வாய்திறவாத ஆட்டுக்குட்டியைப்போல பாவத்திற்கான பலியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் எதிர்பேசவுமில்லை, கூக்குரல் இடவுமில்லை. பிதாவினிடத்தில் ஆவியை ஒப்புக்கொடுத்தார். இவரை நீ விசுவாசிக்கிறாயா? இயேசுவை நீ விசுவாசித்தால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளுவாய், உன்னுடைய பாவங்களை கர்த்தர் மன்னித்து தம்முடைய சபையில் சேர்ப்பார். நித்திய காலமெல்லாம் அவரோடே இருக்கும் பாக்கியத்தை அடைவாய்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, உங்களுடைய பாவங்கள் கழுவப்பட அல்லது மன்னிக்கப்பட கிருபையும் சத்தியமும் வேண்டும். இவை இரண்டையும் உடையவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரை பிதாவாகிய தேவன் தெரிந்து கொண்டார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:44). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கிருபையும் சத்தியமும் நிறைந்த ஆண்டவர் அவர்களுக்குள்ளே மனிதர்கள் பார்க்கும்படியாக வாழ்ந்தார். அவருடைய மகிமையைக் கண்டார்கள். அது ஒரே பிதாவுடைய ஒரே பேறானவருடைய குமாரனுடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. சத்தியத்தின் சொருபியாக உருவமாக இப்பூமியில் வந்தார். அவரைப்பார்த்தார்கள், அவரோடு உண்டு உறங்கினார்கள், அவருடைய அற்புதங்களை பார்த்தார்கள், பெற்றுக்கொண்டார்கள், அதிசயமானவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். எந்த ஒரு மனுஷனாலும் செய்ய முடியாதவைகளைக் கர்த்தர் அந்நாட்களில் செய்து தான் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை உறுதிப்படுத்தினார். அன்பானவர்களே, இவரைப்பற்றிக்கொண்டு உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கர்த்தர் ஒவ்வொருவரையும் எப்படி பரிசுத்தமாக்குகிறார்?**

கறைகள் பட்டுவிட்டால் தண்ணீர் வைத்து கழுவுகிறோம் அல்லது பலவிதமான சோப்புகளை பயன்படுத்தி அதை சரிசெய்கிறோம். மனிதனுடைய பாவத்தை போக்குவது இயேசுவின் இரத்தம். இந்த இரத்தம் கழுவுவதற்கு முன்பு அவர் தம்முடைய வசனத்தை முதலாவது கொடுக்கிறார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என காண்கிறோம் (யோவா.17:17). இயேசுவானவர் எந்த ஒரு பாவியையும் அப்படியே எடுத்து தாம் சிந்திய இரத்தத்தினாலே அவனுடைய பாவத்தைக் கழுவுவதில்லை. அவன் முதலாவது அவரைநோக்கி வரவேண்டும். விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்ற வசனத்தின்படி ஒருவனுக்குள் தேவனுடைய வசனத்தைக்கேட்டு விசுவாசம் எழும்பவேண்டும்.

இந்த விசுவாசமும் வசனத்தைக் கேட்பதால் வரவேண்டும். தேவன் சத்தியமுள்ளவர் ஆகையால் ஒவ்வொருவரையும் சத்தியத்தின்படியே இரட்சிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே கர்த்தருடைய வசனத்திற்கு அதாவது சத்தியத்திற்கு முதலாவது செவிகொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# எல்லோரும் யூதாஸ்களல்ல
# Not all are Judases

-J.C.Choate

அவ்வப்பொழுது தங்கள் பகுதி சபையிலுள்ள அனைத்து பிரச்சனைகளையும் என்னிடம் கூறுகின்ற சில தனிப்பட்ட நபரிடமிருந்து நான் ஒரு கடிதத்தைப் பெறுகின்றேன். அவர் வெளிநாட்டு உதவியையும் பணத்தையுமே சார்ந்திருக்கின்ற பிரசங்கிகளைப் பற்றி குறிப்பிடுகின்றார். அவர்கள் ஞானஸ்நானத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து பிரகாசமான அறிக்கையை அனுப்புகின்றார் என அவர் கூறுகிறார். இதைப்போல் வேறு சில பிரச்சனைகளையும் தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட தனி நபர் அந்தக்காரியங்கள் மிக மோசமானவைகள் என்றும் தான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக இருந்ததற்கு வெட்கப்பட்டதாகவும் எழுதினார். அவர், தன்னுடைய பகுதியில் சபை கெட்டபெயரைக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறார்.

இது துயரமான சம்பவமில்லையா? இதைப்பற்றிய ஒவ்வொரு வார்த்தையும் மிக உண்மையாக இருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு அறிக்கையின் பொருள் என்ன? இது கர்த்தருடைய சபையின் அங்கத்தினர் என உரிமைப்பாராட்டுகின்ற சில மோசமான மக்கள் உண்டென்பதையே காட்டுகிறது. இது சபையை குற்றப்படுத்துகிறதா? இல்லை, வேஷந்தரித்தவர்கள்தான் குற்றவாளிகள், அவர்கள் தங்கள் இருதயத்திலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதே இதன் பொருளாகும்.

நான் இந்தப் பிரச்சனைகளைப் பற்றி எழுதின இந்த குறிப்பிட்ட தனிநபருக்கு சொல்லவிரும்புவது என்னவென்றால் இயேசுவும் தன்னுடைய அப்போஸ்தலர்கள் மத்தியில் யூதாசை பெற்றிருந்தார்! என்பதேயாகும். அது கிறிஸ்துவை குற்றவாளியாக்கவில்லை, அல்லது அவர் ஒரு வேஷந்தரித்தவர் எனப் பொருள்படுத்தவில்லை, மேலும் மற்ற அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தவில்லை. மாறாக, இது கபடமாக நடித்த யூதாசை மட்டுமே குற்றப்படுத்துகிறது. ஒருவருடைய தவறான-செயலுக்காக எல்லோரையும் குற்றப்படுத்தக் கூடாது. மாறாக நாம் வேஷந்தரித்தவர்களைப் புறக்கணித்து, நல்லவர்களாகயிருப்பவர்கள் மேல் முக்கியத்துவம் காட்டவேண்டும்.

அனைத்து சமயக்குழுக்களிலும் மோசமான ஜனங்கள், வேஷந்தரித்தவர்கள், திருடர்கள், பொய்யர், விபச்சாரக்காரர், மேலும் எல்லாவித அசுத்தங்களையும் நடப்பிக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சமய அமைப்புகள் நியாயந்தீர்க்கப்பட்டிராது மேலும் தண்டிக்கவும்பட்டிராது, ஏனென்றால் அந்த அமைப்பின் சில அங்கத்தினர்கள் தவறான செயல்களை செய்து கொண்டிருக்கலாம். மாறாக, இது தேவ வார்த்தையின் போதனை அடிப்படையிலோ அல்லது அந்த புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள நேர்மையின் நிலையோடு அங்கத்தினர்களின் வாழ்வின் மேன்மைக்காக உருவாக்கப்பட்டுள்ள உண்மையான பிரயாசத்தின் அடிப்படையிலோ தீர்க்கப்பட வேண்டும். அங்கே

பவுலின் காலத்தில் சத்தியத்தை விட்டு விலகி உலகத்திற்குத் திரும்பினவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவன் தேமா, இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, பிரிந்து போய்விட்டான் எனக் கூறினான் ( 2தீமோ.4:10 ). மேலும் பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்கு, பிரிவினை போன்ற எண்ணற்ற மோசமான பிரச்சனைகளான சகோதரனுக்கு விரோதமான நடக்கையில் ஈடுபடுதல், விபச்சாரத்தைக் குறித்த குற்ற உணர்வுடனிருத்தல், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை புசித்தல், கர்த்தருடைய பந்தியை சாதாரணமான போஜனத்திற்கு ஒப்பாக எண்ணுதல், இன்னும் இதுபோன்ற பல பிரச்சனைகளைப் பட்டியலிட்டு எழுதினான். ஆயினும், அவன் அங்குள்ள சகோதரரை தேவனுடைய சபையாக அழைத்தான் ( 1கொ. 1:1,2 ). அவர்களுக்கு அவன் எழுதிய இரண்டாவது நிருபத்தில், ஆவிக்குரிய முதிர்ச்சிக்கான வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட அவர்களுடைய பிரயாசத்தில் சில முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததை நம்மால் காணமுடிகிறது.

கிறிஸ்து யூதாஸின் துரோகத்தினிமித்தம் அப்போஸ்தலர்களை கைவிட்டு விடவில்லை,மேலும் யூதாஸ் செய்த காரியத்திற்காக அப்போஸ்தலரும் கலைந்துசென்று விடவில்லை. உண்மையான நிகழ்ச்சியாக, அவர்கள் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள் முதற்கொண்டு, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் நாள் வரைக்கும், அவர்களுடனே கூட இருந்த மனுஷர்களில் ஒருவனை யூதாஸ் இழந்து போன இடத்தில் பங்குபெறுவதற்காக தெரிந்தெடுக்கும்படிக்கு தொடர்ந்து முயன்றார்கள் (அப்.1:21-26).

சகோதரரில் சிலர் தன்னை விட்டு விட்டபடியினாலோ அல்லது கொரிந்து பட்டணத்திலுள்ள சபையில் காணப்பட்ட எல்லா பாவங்களினிமித்தமாகவோ பவுல் சபையை விட்டு விலகவில்லை. அவன் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் தவறான வழியில் சென்ற தன்னுடைய சகோதரரை சீர்திருத்தம் செய்யும் முயற்சியிலும் விசுவாசமுள்ளவனாய் நிலைத்திருந்தான். அவன், கிறிஸ்து எவ்வாறு சபைக்காக மரித்து, அதைத் தம்முடைய இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொண்டு, சபையின் இரட்சகராகவும், அதன் தலைவராகவும், மேலும் அவர் தமக்கென்று சபையை ஏற்றுக்கொள்ளும்படிக்கு திரும்பவும் வருவார் என்ற சபையைக்குறித்த அற்புதமான காரியங்களைச் சொல்லவும் உறுதிகொண்டிருந்தான் ( எபே.5:25; அப்.20:28; எபே.5:23; கொலோ.1:18 1கொ.15:24 ). குறைபாடுள்ள கர்த்தருடைய சபைக்குக் கற்றுக்கொடுத்தான் என்ற இந்தக் கூற்றுகளிலிருந்து, தேவனுடைய கிருபையானது, அவர்களுடைய வாழ்வில் கிறிஸ்தவர்களாக வளருவதற்கு மனிதாபிமான வாய்ப்புகளை அனுமதிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது.நாம் கர்த்தருடைய வழி, அவருடைய சபை, அவருடைய ஜனங்கள் மற்றும் சபையின் நாமத்தினை விட்டு விலகக்கூடாது. நாம், அவர்களுடைய பக்தியற்ற வாழ்வில் சில அங்கத்தினர்களின் துரோகத்தினிமித்தம் சபைதனைக் குறித்து வெட்கப்படுகிறவர்களாயிருக்கக் கூடாது. நாம் அந்த நபர்களைக் குறித்து வெட்கப்படு கிறவர்களாயிருந்து அவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டி, அவர்கள் மனந்திரும்பி மீண்டும் கர்த்தரிடமாய்ச் சேருவதற்கு ஊக்குவித்து நலமானதைச்

செய்யவேண்டும். ஆனால் நாம் கர்த்தரிடத்தில் தாமே விசுவாசமுள்ளவர்களாகவும் அவர் நமக்குச் செய்தவற்றிற்காக நம்மால் முடிந்தவற்றை மென்மேலும் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். ஜீவனோடிருக்கப் போதுமானவற்றை சபைக்கும், அதன் விசுவாசமுள்ள அங்கத்தினராயிருக்க நமக்கும், கர்த்தர் செய்தவற்றிற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்கள் செய்த சிலவற்றிக்காக சபையை விட்டு விலகுவது காரியத்திற்கு உதவாது. நாம் நம்முடைய சொந்த சபையை துவங்கவோ, அல்லது கிறிஸ்துவின் நாமம் தரித்த கபடர்களினிமித்தம் ‘கிறிஸ்துவின் சபை‘ என்ற பதத்துடன் ஒட்டிக்கொண்டிருந்த வெளிப்படையான கறையிலிருந்து விடுவித்துக்கொள்ளும்படிக்கு கர்த்தருடைய சபைக்கு வேறொரு நாமத்தை தெரிந்து கொள்ளவோ கூடாது. நாம் குறிப்பிட்ட சில மாம்ச சுபாவத்துடனிருப்பதால், ஒவ்வொரு குழுவிலும் கபடுசெய்கிறவர்களும், பாவிகளும் இருப்பார்களென நாம் உணர்ந்து கெள்ளவேண்டும். நீங்கள் “துரோகி” யிடமிருந்து விடுவித்துக்கொள்ள கர்த்தருடைய சபையை நிராகரித்தால், நீங்கள் “உங்களுடைய” சபையில் அல்லது வேறுயாரோ ஒருவருடைய சபையில் இதே பிரச்சனைகளையே சந்திப்பீர்கள். -- நீங்கள் தானே கர்த்தருடைய சபையின் ஒரு அங்கத்தினராக ஒருபோதும் கருதப்படமாட்டீர்கள் என்ற வித்தியாசமட்டுமே இருக்கும். ஆகவே நீங்கள் பிரச்சனையின் தீர்வாகயிருப்பதற்குப்பதிலாக பிரச்சனையின் ஒரு பகுதியாக மாறியிருப்பீர்கள்.

நாம் இந்த பூமியின் மேல் சபையில் வேஷந்தரித்தவர்களோடு வாழ வேண்டியவர்களாயிருப்போம் அல்லது அழிவில் வாதையில் வாழ வேண்டியவர்களாயிருப்போம் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். கர்த்தர், அவருக்குக் கீழ்ப்படிந்து மரணபரியந்தம், மற்றவர்கள் செய்கின்றதை கருத்தில் கொள்ளாமல் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும் நமக்கும் உதவிசெய்வாராக! எல்லாரும் துரோகிகள் அல்ல என்பதை சற்றே நினைவுகூருங்கள்.

**ஜெபியுங்கள்**

- இந்த வருடத்தில் இரண்டாம் மாதத்தை காணசெய்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- நம் தேசத்தில் வாலிபர்கள் காக்கப்பட...
- நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் தள்ளுண்டுபோக...
- புதிய வாசகர்களுக்காக...
- நமது தொலைக்காட்சி 24 மணிநேர சேனல்மற்றும் யூடிப் நிகழ்ச்சிக்காக...



## நடப்புச் செய்திகள்

■ டெல்லியில் 3 வது முறையாக ஆட்சியைக் கைப்பற்றும்நோக்கில் ‘மகிளா சம்மன் யோஜனா‘ திட்டத்தின் கீழ் ரூ2,100/- அரவிந்த கெஜ்ரிவால் வாக்குரிமை உள்ள அனைத்து பெண்களுக்கும் விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவர்கள் என அறிவித்துள்ளார்.

■ ரேஷன் கடைகளில் பொருட்கள் வாங்க Mera Ration 2.0 App ஐ மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் ரேஷன் கார்டு இல்லாமலேயே பொருட்கள் வாங்கலாம்.

■ மாநில அரசுகள் வாரிவழங்கும் இலவசத்திட்டங்கள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி வருவதாக RBI கூறியுள்ளது.

நன்றி - NewsPoint

பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

Can Man Find the Way to God?

பாடம் -1

*-Betty*



## நாம் தேவனைக் காணமுடியாது

## We can`t see God

**- சென்ற இதழின் தொடர்ச்சி**

சிலர், தேவனில் விசுவாசம் இல்லாதவர்களாக, இன்னும் தங்கள் சொந்த கண்களால் காண்கிறவற்றையே நம்பும் உணர்வுள்ளவர்களாக, உண்மையாக, "நான் தேவனைக் கண்டதில்லை" அதன்பிறகு, அவர் உண்மையாகவே இருக்கின்றாரா, அதை நான் எப்படி அறியமுடியும்? என அவர்கள் கேட்கின்றனர்.

ஆனால் சற்று நின்று நிதானித்துப்பாருங்கள். உங்கள் சொந்த கண்களால் காற்றைக் காண முடியுமா? எப்போதாவது நீங்கள் புவிஈர்ப்பு விசையை பார்த்திருக்கிறீர்களா? நம்முடைய சரீரக் கண்களால் சாதரணமாக காணமுடியாத பலவற்றில் இவை இரண்டு மட்டுமே, ஏனென்றால் அவைகளெல்லாம் நமக்கு கண்ணுக்குப்புலப்படாத பொருட்களில் ஒரு 'பொருள்' இருந்தபோதிலும், அவைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் இருக்கின்றன என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஏன்? ஏனென்றால நாம் எதைச் செய்கிறோமோ அதையே நாம் காணமுடியும். அதே மாதிரி, தேவன் இருக்கிறார் என்பதை நாம் அறியமுடியும் ஏனென்றால் அண்டசராசரங்களிலுள்ள எல்லா சரீரப்பிரகாரமான பொருட்களையும் அவருடைய படைப்பின் வல்லமையின்மூலம் இருக்கின்றன என நாம் காண முடியும்.

ஆனால் சவால் எழும்புகிறது: "அறிவியல் அறிஞர்கள் உருவான பொருட்கள் பரிணாம வளர்ச்சியினால் உருவானவை - அவைகள் சிருஷ்டிகரைக் கொண்டிருக்கவில்லை. எனவே இருக்கின்ற சரீர பிரகாரமான அண்டசராசரங்கள் தேவன் இருக்கிறார் என எவ்வாறு நிரூபிக்க முடியும்? என்கின்றனர்.

### நுண்ணறிவுள்ள திட்டத்திற்கு சாட்சியம் உண்டு

ஒருவேளை நீங்கள் ஒரு பாதையின் வழியே சென்று கொண்டிருக்கலாம், உங்களுடைய கண் புற்களுக்குள்ளே பாதி மறைந்துள்ள ஏதோ ஒன்றை சுட்டிக்காட்டுகிறது. நீங்கள் அதை எடுக்க குனிகிறீர்கள் அதன்பின் அது ஒரு உடைந்துபோன அழகிய பூக்களின் சித்திரம் தீட்டப்பட்ட பீங்கான் தட்டு என்பதை அறிகிறீர்கள். களிமண்ணால் கொஞ்சங்கொஞ்சமாக இவ்விதமான வடிவத்தைப் பெற எத்தனை இலட்சம் ஆண்டுகள் எடுத்திருக்கும், மேலும் இந்த மென்மையான பூக்கள் உண்மையான பூக்களைப்போல அச்சுபதித்து இந்த சித்திரம் தீட்ட எத்தனை அதிகமான பல கோடி ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும் என நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றும் மேலும் இது எங்கிருந்து, எங்கே உருவாகி, இந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு எவ்வாறு இரண்டு பகுதிகளாக உடைக்கப்பட்டுள்ளது? என நான் அதிசயிக்கிறேன்" என்றும் நினைப்பீர்களா?

இல்லை; இப்படிப்பட்ட நினைவுகள் ஒருபோதும் ஒருவருடைய நினைவிலும் உண்டாகாது. அது தட்டையானதும் வட்டமான - உடைந்த தட்டாக

இருந்தபோதிலும், சித்திரந்தீட்டப்பட்டதாகவும் - அதை உருவாக்குவதற்கு மனிதனுடைய மதிநுட்பம் தேவைப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் ஏதோ திறமையுடைய ஓவியர் - மீண்டும், மதிநுட்பம், சித்திரந்தீட்டும் அறிவுத் திறமையோடுள்ள ஒரு மனிதன் - அழகிய வடிவமைப்பிற்கும் மென்மையான வண்ணங்களுக்கும் பொறுப்பாளியாக இருந்திருக்கிறான் என்பதையும் அறிவீர்கள். மேலும் யாரோ ஒரு மனிதன் உடைந்துபோன துண்டுகளை உங்கள் வழியில் போட்டிருக்கிறான் என்பதையும் அறிவீர்கள்.

மனிதன் தட்டினை உருவாக்குகின்றதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்ததை நிச்சயமாக நீங்கள் பார்க்கவில்லை உங்களால் பார்க்க முடியவில்லை என்பதும் அதை உருவாக்க மனிதனுடைய மதிநுட்பம் தேவைப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையல்லவா? அந்த தட்டு பத்து ஆயிரம் மில்லியன் ஆண்டுகளிலும் கூட தானாகவே உருவாகியிருக்கவில்லை என்பதை நீங்கள் முழுமையாக நிச்சயிக்கவில்லையா?

இப்போது, நீங்கள் வண்ணம் தீட்டப்பட்ட உடைந்த தட்டிற்குப் பதிலாக உண்மையான பூக்களை - உயிருள்ள பொருட்களை - உங்கள் காலுக்கடியில் அற்புதமான மிகுந்த வண்ணத்திலும் வாழ்வினையும் கொண்டு வளருகின்றவற்றை பார்க்கலாம். நீங்கள் குனிந்து அதற்கருகில், சிக்கலான விபரத்தினையும், அதன் பாகங்களின் ஒரே சீரான சித்திர அமைப்பினையும் பார்க்கச் சென்று; நீங்கள் இதழ்களின் வழுவழுப்பான தன்மையையும், எப்படியோ அதன் மிருதுவான வெல்வெட்டை தொடும்போது ஏற்படும் மென்மைத்தன்மை; மென்மையான காற்றுவீசுவதனால் ஏற்படும் பூக்களின் இனிய வாசனையை உங்களுடைய மூக்கு நுகர்வதையும் உணர்வீர்கள். பளப்பளப்பான தாவரங்களின் இலைகள், தண்டுகளைக் கண்டு நீங்கள் வியந்து, மேலும் ஊதா வர்ணம், மஞ்சள், நீல நீறம், வெண்மை, ஆரஞ்சு நிறம் அல்லது சிவப்பு நிறம் - இப்படிப்பட்ட வித்தியாசமிக்க இழைகள் நிறங்கள் எல்லாம் ஒரே தாவரத்தில் இருப்பதைக் கண்டு வியப்பீர்கள்!

-தொடரும்...

**வாசகர் கவனத்திற்கு...**

**ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய (பதிவு எண்) Ref.No-யை எழுதவும்.**

நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண் அதாவது Ref.No. ஐ தெரியப்படுத்தவும். வருடத்தில் ஒரு முறையாவது ஒருவருக்கு நமது இதழை அறிமுகம் செய்து அவர்களுடைய முகவரியை எமக்கு எழுதி அனுப்புங்கள். தற்போது ஆராயிரம் வாசகர்களைக் கொண்ட இதழ் அடுத்த ஆண்டில் பன்னிரெண்டாயிரமாக மாறும் உங்களுடைய முயற்சி இருந்தால். இதுவும் ஒரு ஊழியமே! இதை இன்றே செய்யுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**- நன்றி ஆசிரியர்.**

# அவள் வருங்காலத்தைப் பற்றியும் மகிழ்கிறாள்
## She Shall Rejoice In Time To Come

பெண்கள் பகுதி

-Glory Arjunan



யார் இவள்? வருங்காலத்தைப் பற்றி மகிழ்கிற ஸ்திரீ எப்படிப்பட்டவள்? ஏன் நீதிமொழிகள் 31-ம் அதிகாரம் வசனம் 10 முதல் 31 வரை இவளைப் பற்றி இவ்விதமாய் வர்ணிக்கிறது?

இவள் ஒரு "குணசாலியான ஸ்திரீ". அப்படித்தான் இவளிடம் என்னென்ன விசேஷித்த குணங்கள் உண்டு என்று பார்ப்போமே. இவளுடைய குணங்கள் நிச்சயமாக நம்மையும் இந்த புத்தாண்டில் மகிழ்ந்திருக்கப்பண்ணும் என்பதில் சந்தேகமில்லை.

ஆம், இந்த குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (வசன.10). எஸ்தர் என்ற ஸ்திரீயைப் பற்றி நாம் எஸ்தர் புத்தகத்தில் வாசிக்கலாம். எஸ்தர் ஒரு யூத ஸ்திரீ. இவளுக்குத் தாய்தகப்பன் இல்லை. மொர்தெகாய் என்பவனின் சிறிய தகப்பன் குமாரத்தி தான் இந்த எஸ்தர் என்பவள். இவளை மொர்தெகாய் எஸ்தரின் பெற்றோர் மரணமடைந்தவுடன் தன் குமாரத்தியாக எடுத்து வளர்த்து வந்தான் (எஸ்.2:7). இந்த எஸ்தர் தாயும் தகப்பனையும் இழந்த போதிலும் குணசாலியான ஸ்திரீயாகத் திகழ்ந்தாள். எனவே தான் இவள் மூலமாக யூத குலத்திற்கே இளைப்பாறுதல், சந்தோஷம், மகிழ்ச்சி கிடைத்தன (எஸ்.9:21). இவள் இந்துதேசமுதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாட்டிற்கும் ராஜாத்தியாக மாறினாள். இவள் குணசாலியாக இருந்ததினால் ராஜாவாகிய அகாஸ்வேருவை சந்திக்கப் புறப்படுமுன் தன் தாதிமார்களோடு மூன்றுநாள் தேவசமூகத்தில் ஜெபம்பண்ணி அதன்பின் ராஜாவை ஏற்ற சமயத்தில் சந்தித்து தன் விண்ணப்பத்திற்குப் பதிலைப் பெற்றுக்கொண்டாள் (எஸ்.4:16). ராஜாவின் கண்களில் தயவையும் பெற்றுக்கொண்ட ஸ்திரீ இவள். நீதி.31:1-ல் "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் எனக்காண்கிறோம். இதைப்போலவே எஸ்தரின் புருஷனாகிய அகாஸ்வேருவின் இருதயம் அவளை நம்பினது. இவள் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்ததல்லவா?

மேலும் ஒரு குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குத் தீமையையல்ல நன்மையையே செய்கிறாள் என வாசிக்கிறோம் (நீதி.10;12). ஒரு உண்மைக் கிறிஸ்தவளாக இருக்கும் ஸ்திரீயும் தன் புருஷனுக்கு நன்மையையே செய்யவேண்டும். எவ்விதத்திலும் தன் புருஷன் மட்டுமே கஷ்டப்பட்டு வேலை செய்து வரவேண்டும். நாம் வீட்டில் சும்மா இருந்துகொண்டு பொழுதைக் கழிக்கலாம் என்றிருக்கக்கூடாது. அநேக ஸ்திரீகள் அவ்வாறு தான் இருக்கிறார்கள். இப்படியிருப்போமானால் நம் கணவருடைய சம்பத்துக் குறையத் தான் செய்யும். ஆனால் ஒரு குணசாலியான ஸ்திரீ நிச்சயம் வீட்டிலிருந்துகொண்டே எவ்விதத்திலெல்லாம் தன் புருஷனுக்கு நன்மை செய்யலாம் என்று சிந்திப்பாள்.

அடுத்ததாக, குணசாலியான ஸ்திரீ 'உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள்'' (வச.13,14) என்று வாசிக்கிறோம். அனுதினமும் எங்கள் தெருவிற்கு அதிகாலமே ஒரு பெண் காய்கறிகள், கீரை என்று சத்தம் போட்டு கூவி அழைத்து விற்பனை செய்யவருவாள். அவளுடைய சப்தத்தைக்கேட்டு தூங்கிக் கொண்டிருக்கிற அனைவருமே விழித்துக்கொள்ள வேண்டும். இந்த ஸ்திரீ ஒரு அந்நிய ஸ்திரீ ஆனால் நீதிமொழிகளில் கூறப்பட்ட குணசாலியான ஸ்திரீயைப்போலவே வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள். ஆனால் அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் இப்படிப்பட்ட உற்சாகத்துடன் காணப்படுவதில்லை. மேலும் இன்னும் சிலருக்கு 'Prestige Issue'. நாம் போய் ஒரு கீழான வேலை செய்வதா? என்று நினைத்து ஆடம்பர வாழ்வு வாழ்ந்து கடன்பட்டு இங்குமங்குமாக அலைந்து கொண்டிருப்பர். அன்பு சகோதரியே, இந்த குணசாலியான ஸ்திரீயைப் போல் வியாபாரக் கப்பல்களைப் போல் மாறுங்கள். உங்கள் புருஷனின் சம்பத்துக்குறையாதிருக்கும்.

மாத்திரமல்ல, குணசாலியான ஸ்திரீ திராட்சத் தோட்டத்தை நாட்டுகிறாள்: தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள் அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும். சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து ஏழைகளுக்குத் தன்கரங்களை நீட்டுகிறாள் (வச.16-20). இவ்வசனங்களை வாசிக்கும் போது புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இடம்பெற்றுள்ள தபீத்தாள் என்பவள் நினைவிற்கு வருகிறது. ''தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்'' (அப்.9:36) என வாசிக்கிறோம். இவளுடைய நற்கிரியைகளைப் பற்றி அப்பட்டணத்திலிருந்த மற்ற ஸ்திரீகள் சாட்சிபகருகின்றனர் (அப்.9:39).

மேலும் நீதிமொழிகள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள குணசாலியான ஸ்திரீ மெல்லிய புடவைகளை விற்கிறாள் அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான் என்றெல்லாம் வாசிக்கிறோம். ஒவ்வொரு குணசாலியான ஸ்திரீயினிமித்தம் அவளுடைய புருஷனுக்குப் பேரும் புகழும் ஏற்படவேண்டும். அப்போது அவளுடைய புருஷனுக்கு அவள் கிரீடமாயிருப்பாள். ஆபிரகாமின் மனைவி ''அந்தப்படியே ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்'' (1பேது.3;6). நாமும் இவர்களைப் போலிருப்போமா?

கடைசியாக: குணசாலியான ஸ்திரீ, ''...வருங்காலத்தைப்பற்றியும் மகிழ்கிறாள்'' (நீதி.31:25). ஏனென்றால், மேற்குறிப்பிட்டுள்ள காரியங்களைச் செய்யும் போது நாம் சோம்பலின் அப்பத்தைப் புசிக்கமாட்டோம், நம்பிள்ளைகள் எழும்பி நம்மை பாக்கியவதி என்பர் நம் புருஷன் நம்மைப் பார்த்து 'அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று புகழுவார் (வச.27-29) குணசாலியான ஸ்திரீ இவ்விதமாகக் காணப்படும் போது அவள் கர்த்தருக்குக் பயப்படுகிற ஸ்திரீயாகவும் புகழப்படுவாள் (வச.30). கர்த்தர் தாமே சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்து வருங்காலத்தைக் குறித்து மகிழப்பண்ணுவாராக! ஆமென்.



# Simple Sermons That Teach

## பாடம் 1

## துவாலையின் பாடம்

Lessons of the Towel

*- Jerry Bates*

**சென்ற மாதத் தொடர்ச்சி...**

**ஊ) ஊழியம் செய்கிறவனாயிருக்கும்படி ஒருவன் தாமாகவே தன்னை சேவகனாக்கிக் கொள்ள அவனை உந்தும் சக்தி எது? அன்பு.**

1. முதல் வசனத்தில் கவனியுங்கள். அங்கே கிறிஸ்துவின் அன்பு அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தம்முடைய சொந்த சீடர்களை கடைசிவரை நேசித்தார். கிறிஸ்துவின் அன்பு எல்லையில்லாதது.

2. நீங்கள் கிறிஸ்து நேசித்ததுபோல் நேசித்தால் நீங்கள் அவரைப்போல் செய்ய யாரும் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. தென் கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு மருத்துவமனையை பணக்கார அமெரிக்கர் ஒருவர் ஒருமுறை பார்த்தார் கழிவுநீர் செல்லுமிடத்தில் படுத்திருந்த ஒரு முதியவரை சேவையினிமித்தம் வேலை செய்த ஒரு சேவகிப்பெண் அவருடைய புண்களை சுத்தம் செய்வதைப் பார்த்தார். அந்த நபர் செவிலியரிடம் எனக்கு பத்துலட்சம் டாலர் கொடுத்தாலும் இதை நான் செய்யமாட்டேன் என்றார். அந்த மருத்துவ உதவி செய்யும் பெண் அமைதியாக சொன்னாள். நானும் கூடத்தான் ஆனால் பணத்தை விடவும் உயர்ந்த நோக்கங்கள் உண்டு.

**II. பரிசுத்தத்தைப் பற்றிய பாடங்களை நாம் படிக்கவேண்டும் (13:6-11)**

அ) பேதுருவிடம் இயேசு வந்தபோது பேதுரு அவர் தம்முடைய கால்களையும் கழுவப்போகிறாரா என்று கேட்டார்.

ஒரு அடிமை செய்யும் தாழ்வான வேலையை தாம் ஏன் செய்யப்போகிறோம் என்பது அப்போது அவருக்குப் புரியாது ஆனால் பிறகு புரியும் என்று விளக்கிச் சொன்னார். அதாவது அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் ஆவியானவருடைய வருகைக்குப் பின்பு அவருக்கும் (பேதுருவுக்கும்) புரியுமென்றார்.

1. பேதுருவுக்கு புரியவில்லை. தன்னுடைய கால்களை இயேசு ஒருபோதும் கழுவக்கூடாது என்றார். கிரேக்க மொழியிலே அந்த வாக்கியத்தில் இரண்டு எதிர்மறை சொற்கள் இருக்கின்றன அது சொன்ன எதிர்மறையை மேலும் அழுத்திச் சொல்வதற்காக "நீர் ஒருபோதும் ஒருபோதும் என் கால்களைக் கழுவக்கூடாது"

2. உன் கால்களை நான் கழுவாவிட்டால் நமக்குள் ஐக்கியம் இருக்காது என்று இயேசு சொன்னார்.

3. பேதுரு பதிலாக என் சரீரம் முழுவதையும் கழுவும் என்றான்.

4. தனக்குரிய தாழ்மையிலே கிறிஸ்துவை விடவும் அதிகமாக தனக்குத் தெரியும் என்று பேதுரு நினைத்தார். நம்மில் அநேகருக்கு இருக்கும் பிரச்சனை பேதுருவுக்கும் இருந்தது. கர்த்தர் பார்க்கிறது போல் நாமும் பார்ப்பது.

**ஆ) அசுத்தமான பாகங்கள் கழுவப்பட்டாலே போதும் என்று இயேசு சொன்னார்.**

1. பின்பு இயேசு அனைவரிடமும் பேசுகிறார் அவர்கள் அனைவரும் சுத்தமாயிருக்கிறார்கள்.

2. ஆனால் அவர்களில் அனைவரும் சுத்தமாயிருக்கவில்லை. இது தெளிவாக யூதாசைப் பற்றிய குறிப்பாகும் (13:11) அவர்கள் அனைவரும் சரீரத்தில் சுத்தமாயிருந்தார்கள் ஆன்மாவிலல்ல. யூதாசுக்கு இருந்த பிரச்சனை அசுத்தமான

கால்களல்ல ஆனால் அவனுடைய அசுத்த இருதயமாகும்.

**இ) இங்கே ஆவிக்குரிய ஒரு பாடத்தை இயேசு போதிக்கிறார். இயேசு சிலுவையில் அவமானப்படுத்தப்பட்டு அனுபவித்த பாடுகள் மனிதர்களையும் பெண்களையும் அவர் சிந்திய இரத்தத்தால் பாவங்கள் நீங்க சுத்திகரிக்கும்.**

1. இயேசுவானவரால் நாம் அனைவரும் கழுவப்பட வேண்டும். இயேசுவானவரின் இரத்தம் நம்மனைவரையும் பாவங்களறக் கழுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மைக் கழுவிய அவருக்கே மகிமையும் வல்லமையும் உண்டாயிருப்பதாக. (வெளி.1:6)

2. அப்.22:16

3. வாழ்க்கையில் நாம் அழுக்காக கடந்து செல்லும் போது தொடர்ந்து கழுவப்படுவது நமக்கு அவசியமாயிருக்கிறது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் (1யோவான் 1:9).

**III. மகிழ்ச்சியின் பாடம் (13:12-17)**

அ) ‘‘கால்களைக் கழுவ’’ நாம் கற்றுக்கொள்ளவேண்டும்

1. இயேசு தன் இடத்திற்குத் திரும்பிவந்த பின்பு தாம் செய்ததை புரிந்து கொண்டீர்களா என்று அவர்களை உபசரித்த இயேசு கேட்டார். ‘‘கருத்து இன்னதென்று உங்களுக்குப் புரிகிறதா?

2. எஜமானனின் நிலைப்பாடு சேவையின் நடைமுறைக்குப் பொருந்தாது.

3. இயேசு சொன்னார் நீங்கள் என்னை போதகர் என்றழைக்கிறீர்கள். அவர்களுடைய போதகராக அவர் இருந்தார். போதகருக்கு எது பொருத்தமாயிருக்குமோ அது சீடர்களுக்கும் பொருத்தாயிருக்கும்.

4. இயேசு அவர்களிடம் தம்முடைய கால்களைக் கழுவும்படி சொல்லும்படி நாம் எதிர்பார்க்கலாம் இன்னும் அவர்கள் அசுத்தமாகவே இருக்கிறார்கள் நம்மில் அநேகர் இயேசுவின் கால்களைக் கழுவத்தயங்கமாட்டோம். ஆனால் அவர் அவர்கள் ஒருவர் கால்களை ஒருவர் கழுவ வேண்டும் என்றார்.

**ஆ) எந்தக்கால்களை நாம் கழுவவேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.**

1.நம் நண்பருடையவைகளையா? அது மிகவும் மோசமாயிருக்காது.

2. ஆனால் இயேசு யூதாசின் கால்களையும் கூட கழுவினார். அதைப்போல மற்றவர்களுடைய கால்களைக் கழுவினார்.

3. நாம் எல்லாருடைய கால்களையும் கழுவவேண்டும் நண்பன், பகைவன் இருவரது கால்களையும் சமமாகக் கழுவவேண்டும் (13:16)

**இ) கால்களைக் கழுவும் சடங்கு ஒன்றை நாம் செய்யவேண்டுமா?**

1. எப்போதாவது சில மதக் கூட்டத்தார் செய்கிறார்கள். இதிலே பங்குபெறும்படி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் சுத்தமான பாதங்களோடு சபைக்கு வருகிறார்கள். யார் கழுவுகிறார்களோ அவர்கள் சுத்தமான கால்களுள்ள வரிசையையே சரியாகக் கழுவுகிறார்கள். முக்கியமான அடிப்படை நோக்கம் அசுத்தமான கால்களைக் கழுவ வேண்டுமென்கிற நோக்கம் தொலைந்துபோகிறது.

2. புதிய ஏற்பாட்டில் இதைத்தவிர வேரு ஒரு இடத்தில் இதைப் பற்றி குறிப்பிட்டிருப்பது 1தீமோ.5:9-10 வசனங்களில் இங்கே சபையால் ஆதரிக்கப்பட வேண்டிய விதவைகளின் தகுதிகளைப் பற்றி குறிப்பிடுகையில் இதைச் சொல்லுகிறார்.

3. ஆதிக்கிறிஸ்தவர்களின் துவக்ககாலக் குறிப்புகளில் கால் கழுவுவதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அந்த விதமான சடங்கு சபைத் தொழுகையில் துவக்க காலங்களில் ஒருபோதும் கைக்கொள்ளப்படவில்லை.

4. சார்லஸ் ஹட்ஜ் சொன்னபடி "நாம் கால்கழுவுவதைப்பற்றிய விவாதங்களில் வெற்றி பெற்று இருக்கலாம். ஆனால் நாம் இன்னும் கால்களை கழுவ கற்றுக்கொள்ளவில்லை" இந்த 21-ம் நூற்றாண்டில் சமமாயிருப்பவர்கள் பிறருக்கு சேவை செய்ய மனதாயிருப்பவர்கள். அவர்கள் யாராயிருந்தாலும் கவலையில்லை அதற்காக எவ்வளவு செலவானலும் கவலையில்லை. அந்த வேலை எவ்வளவு மோசமானதாயிருந்தாலும் கவலையில்லை.

5.ரூத் ஹார்மஸ் காள்கின் என்வர் 'நான் வியக்கிறேன்' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். கர்த்தாவே மிகுந்த புகழ்ச்சியிலும் எப்படி ஊக்கமாய் உமக்கு ஊழியம் செய்கிறேன் என்பது உமக்குத் தெரியும் பெண்கள் சங்கத்தில் எவ்வளவு உணர்வுபூர்வமாய் உமக்காகப் பேசுகிறேன் என்பது உமக்குத்தெரியும். ஒரு ஐக்கியக்கூட்டத்தை கட்டி உருவாக்கும் போது உற்சாகப் பெருக்கில் செயல்படுகிறேன் என்று உமக்குத் தெரியும் வேத வகுப்பில் எனது உண்மையான உற்சாகம் உமக்குத் தெரியும். ஆனால் நான் எப்படி செயல்படுவேன், வியக்கிறேன்! நீர் ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரிடம் என்னை போகச் சொல்லி ஒரு கொடூர மனநிலையில் கூனி சுருங்கிப்போனவரின் கால்களைக் கழுவச் சொன்னால் ஒரு நாள் மாறி மறு நாள், மாதம் சென்று மாதம். யாரும் காணாத யாரும் அறியாத அறையில்.

6. உனக்காக "எத்தனைபேர் வேலை செய்கிறார்கள் என்று உலகம் கேட்கிறது" கர்த்தர் கேட்கிறார் எத்தனை பேருக்காக நீ பணிசெய்கிறாய்? என்று

**ஈ. "கால்களைக் கழுவுவது" என்பது மகிழ்ச்சிக்கான திறவுகோல் (13:'7)**

1. ஏதோ தெரிந்துவைத்திருப்பது மட்டும் போதுமானதல்ல. பிறருக்கு நாம் சேவை செய்யவேண்டும். கண்டிப்பாக நாம் செய்யவேண்டும்.

2. பாக்கியவான் என்கிற வார்த்தையும் இயேசு பரமானந்தத்தைப் பெறுவதற்காக போதித்த வார்த்தைகளிலே சொன்ன பாக்கியவான் என்பதும் ஒரே பொருளுடையது தான். இது புறச்சுழலைச் சார்ந்திராது உள்ளன. சந்தோஷம் அல்லது மகிழ்ச்சியை குறிப்பிடுவதாகும்.

3. உலக அளவுகளின்படி இது பொருள் தராது. சந்தோஷம் என்பது பிறர் தரும் பொருட்களாலோ அல்லது பிறர் நமக்கு செய்யும் சேவையாலோ கிடைப்பது என நாம் நினைக்கிறோம். ஆல்பர்ட் சுவைட்சர் என்பவர் குறிப்பிடுவது உங்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று எனக்குத் தெரியும், மக்களுள் யார் சந்தோஷமாயிருப்பார் என்றால், பிறருக்கு சேவை செய்யும் வழியை கண்டுபிடித்தவர்தான்.

**முடிவுரை:**

1. நான் சேவை செய்ய சித்தமாயிருக்கிறேனா? ஜீன் ஸ்ட்ரீட் தொடர்ச்சியாக நடத்திய உணவு விடுதி வியாபாரத்தில் லட்சக் கணக்கில் சம்பாதித்தனர். உணவு விடுதி நடத்தும் தொழிலில் எப்படி வெற்றிகரமாக இருக்க முடிந்தது என்பதைக் கண்டறிந்ததைப் பற்றி கூறுவது. "உனக்கு ஒரு வேலையாளின் மனப்பான்மை இல்லாவிட்டால் அது செயல்படாது. இது ஒரு விடுதி விஷயத்தில் உண்மையானால் சபையைப் பொறுத்தமட்டில் இது எவ்வளவு அதிகம்.

2.நடத்தும் தலைவர்கள் கூட (ஏன் விசேஷமாக என்று சொல்லலாம்) கட்டாயம் சேவகர்களாயிருக்க வேண்டும்.

3. சபையானது சேவை செய்யக் கூடியதாயிருக்க வேண்டும். மற்றவர்களின் சேவகனாய், கடவுளின் சேவகனாயிருக்க வேண்டும். - **மீண்டும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்**



# HOLY THINGS
# பரிசுத்தமானவைகள்

- J.C. Choate

**நீ**ண்ட காலத்துக்கு முன்பு பவுல் சொன்னார்: ''அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' (ரோமர் 12:1).

தயவு செய்து இவ்வசனத்தின் பிற்பகுதியை மனதிலே வைத்து சிந்தனை செய்யுங்கள். மிகவும் கவனமாக, தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய சரீரங்களை தேவனுக்கென்று பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதை கூர்ந்து கவனியுங்கள். மேலும், எழுத்தாளர் கூறுகிறார், ''இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' என்று. விசேஷமாக நீங்கள், ''பரிசுத்தமான'' என்ற சிறிய வார்த்தையை யோசித்துப் பாருங்கள். இந்த முழு வசனப் பகுதியும் பரிசுத்தத்திற்கே ஒரு கெஞ்சுதலாய் இருக்கிறது.

மற்றொரு அப்போஸ்தலரும் எழுதினார்; ''நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்'' என்று எழுதியிருக்கிறதே (1 பேதுரு 1:14-16). இவ்விதமாக பேதுருவானவர் தம்முடைய காலத்தில் வாழந்த ஜனங்களிடம் கர்த்தர் பரிசுத்தமானவர் என்பதை உணர்ந்து அவர்கள் தங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் என்று அழைக்கிறார். அதுவே எப்பொழுதும் அவருடைய வாஞ்சையாக இருந்திருக்கிறது. இந்த மாற்றத்தினால் எந்த அபாயமும் இருக்கிறதில்லை.

மேற்சொன்ன வேதவாக்கியங்கள் குறிப்பிட்டு காட்டியபடி மற்றவர்களும், ''பரிசுத்தமான'' என்ற வார்த்தையை குறித்து பேசியிருக்கக்கூடும். அது நன்மையானதாக இருக்கலாம். தொடர்ந்து இப்பாடத்தில் செல்வதற்கு முன் ''பரிசுத்தமான'' என்ற பதத்தை வரையறுக்கிறோம். பரிசுத்தமான என்ற வார்த்தை சுத்திகரிக்கப்படுதலை அல்லது பிரித்தெடுக்கப்படுதலை குறிப்பிடுகிறது; அது தேவனுக்கேற்றதாக சுத்தமானதாக இருக்கிறது. இதற்கு தொடர்புடைய வகையிலே இந்த பரிசுத்தமான என்ற வார்த்தை ஒரு நல்ல வேதவாக்கியத்திற்குரிய பதமாக இருக்கிறது. இந்த சத்தியமானது அநேக ஜனங்கள் ''பரிசுத்தமான'' அல்லது ''பரிசுத்தம்'' என்ற வார்த்தையை குறிப்பிட்ட ஒரு மார்க்க சம்பந்தமான மக்கள் கூட்டம் சொல்வதற்கு பயப்படுகிறது. அவர்கள் தங்களையே ''பரிசுத்தம்'' என்று அழைத்துக் கொள்கிறார்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட ஜனங்கள் வேதவாக்கியங்களுக்கு எதிரானவர்களாயிருந்து மற்ற வழிகளிலே பரிசுத்தத்தை வலியுறுத்துவதிலே தாங்கள் சரியாக இருப்பதாக சொல்லிக் கொள்கிறார்கள். குறிப்பு என்னவென்றால் நம்மில் தங்களை தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் மெய்யான கிறிஸ்துவின் சபையார் பரிசுத்தத்தின் அழகை முன்நிறுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையை

குறித்து வெட்கப்படுகிறவர்களாயிருக்க வேண்டாம். கர்த்தர் சொல்லியிருக்கிறபடியே நாம் பரிசுத்தமானவர்களாயிருக்க வேண்டும். அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, அது என்னவென்றால், நாம் எப்பொழுதுமே பூரணப்படுதலை நோக்கி பிரயாசப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். பின் ஒருநாளிலே உண்மையுள்ளவர்கள் பூரணராக்கப்பட்டு என்றென்றுமாய் கர்த்தரோடே கூட ஜீவிப்பார்கள்.

பரிசுத்தமாயிருக்கிற இந்த காரியங்களை இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள்.

**1. தேவன் பரிசுத்தராயிருக்கிறார் (யோவான் 17:11)**

அவர் தொடக்கமும் முடிவும் இல்லாதவராக, பரலோகத்தில் ஆளுகை செய்கிறவராக, சகலத்தையும் சிருஷ்டித்தவராக இருக்கிறார். அவருடைய குமாரன் அவரை, "பரிசுத்த பிதா" என்று அழைக்கிறார்.

**2. கிறிஸ்து பரிசுத்தராயிருக்கிறார் (1 பேதுரு 1:15)**

இவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார், பரலோகத்தில் இருந்து வந்து, ஒரு பூரணமான ஜீவியத்தை ஜீவித்து, தன்னுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு பின்பு தன்னுடைய பிதாவினிடமாய் பரத்துக்கு ஏறிச்சென்று ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தராக ஆளுகை செய்கிறார்.

**3. ஆவியானவர் பரிசுத்தராயிருக்கிறார் (மத். 28:19)**

கிறிஸ்துவானவர் ஆவியானவரை அப்போஸ்தலர்களிடத்தில் அனுப்பினார்; அவர் தேவமனுஷர்களை வேதவாக்கியங்களை எழுதும்படி வழிநடத்தினார்; அவர் தேவனுக்கு கீழ்ப்படிகிற ஆத்துமாக்கள் அனைவருக்கும் அருளப்படுகிறார். அவர் பரிசுத்தமானவராய் இருக்கிறதாகவும் பேசப்படுகிறார்.

**4. சபை பரிசுத்தமானதாயிருக்கிறது (எபி. 3:1)**

கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார்; தம்முடைய இரத்தத்தினாலே விலைக்கிரையமாக வாங்கினார்; இவர் அதற்கு தலையாகவும், இரட்சகராகவும் இருக்கிறார்.

**5. சுவிசேஷம் பரிசுத்தமானதாயிருக்கிறது (ரோமர் 1:16)**

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவற்றை அடிப்படையாக கொண்டது; தொலைந்துபோன நிலையில் இருக்கிறவர்கள் சுவிசேஷத்தினால் அழைக்கப்படுகிறார்கள்; அது இரட்சிக்கும் வல்லமை கொண்டதாய் இருக்கிறது.

**6. கிறிஸ்துவின் இரத்தம் பரிசுத்தமானதாயிருக்கிறது (1 பேதுரு 1:18,19)**

கிறிஸ்துவின் இரத்தம்; இது மீட்பையும், பாவமன்னிப்பையும் அளிக்கிறது; இது மன்னிக்கிறது அல்லது பாவங்களற கழுவுகிறது.

**7. அவருடைய நாமம் பரிசுத்தமானது (அப்போஸ்தலர் 4:12)**

கிறிஸ்துவின் நாமம்; கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், மொத்தமாகவும் அதைத் தரித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அதிலே இரட்சிப்பு இருக்கிறது.

**8. வார்த்தை பரிசுத்தமாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16,17)**

தேவனுடைய வார்த்தை, இவைகள் அனைத்தும் தேவனால் ஏவப்பட்டதாயிருக்கிறது. அது இரட்சிக்கும் வல்லமை கொண்டதாயிருக்கிறது.

**9. பரலோகம் பரிசுத்தமானதாயிருக்கிறது**

தேவனும், கிறிஸ்துவும் அங்கே வாசம்பண்ணுகிறார்கள். நீதிமான்கள் மட்டுமே அதை சுதந்தரித்துக் கொள்வார்கள். அது என்றென்றுமாய் நிலைத்திருக்கும்.

இவைகள் அனைத்துமே பரிசுத்தமானவைகளாய் இருக்கிறபடியால், நாம் ஒரு சில கேள்விகளை கேட்போமாக. இந்த உலகத்தில் பாவியான ஒருவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக ஜீவிக்காவிட்டால் அவன் இரட்சிக்கப்படுவதைக் குறித்து எவ்வாறு சிந்திக்க முடியும்? பூமியில் தவறிப்போகிற ஒரு கிறிஸ்தவன், அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே மரிப்பானேயாகில், அவன் ஒரு நிமிடம் இரட்சிக்கப்பட முடியும் என்று எவ்வாறு சிந்திக்க முடியும்? கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்கென்று பரிசுத்தமாக ஜீவிக்காத வரையில் நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று எவ்வாறு எண்ண முடியும்? கருத்து என்னவென்றால் குறிப்பிடப்பட்டிருக்கிறவைகள் பரிசுத்தமானவைகள் என்றால் நாம் அவைகளோடு (அவர்களோடு) ஐக்கியமாக இருக்கும்படி பரிசுத்தமானவர்களாயிருக்க வேண்டியதாயிருக்கிறது. தேவனுடையவைகள் அனைத்தும் பரிசுத்தமானவைகளாக இருக்கிறபடியால் அவைகளோடு (அவர்களோடு) ஐக்கியமாயிருக்கும்படி, நாம் பரிசுத்தமானவர்களாய் இருக்க வேண்டியதாயிருக்கிறது. நாம் "பரிசுத்தமானவர்களாயிருக்கும்படி சமயம் எடுத்துக்கொள்ள" கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

வாசகருக்கான நற்செய்தி

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி**

***TWOC NO.7 பிப்ரவரி 2025***

1. கிருபையினாலே எதைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்?
2. யூதாஸ் செய்த காரியத்திற்காக அப்போஸ்தலரும் கலைந்து சென்று விட்டார்களா?
3. அறிவியல் அறிஞர்கள் உருவான பொருட்கள் பரிணாம வளர்ச்சியில் உருவானவையா?
4. குணசாலியான ஸ்திரீயின் விலை எதைப் பார்க்கிலும் உயர்ந்தது?
5. ஆதி கிறிஸ்தவர்கள் துவக்காலத்தில் உள்ள குறிப்புகளில் கால் கழுவுவதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்களா?
6. ஜீவ கிரீடத்தை தருவேன் என்று எந்த சபைக்கு வாக்குப்பண்ணினார்?
7. அமைச்சர் பேசி முடித்தவுடன் யாரும் கைதட்டவில்லை, ஏன்?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள **TWOC No,** உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும். உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் அடுத்த மாதம் 10ம் தேதிக்குள் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனி தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி. ஆசிரியர்.



# சிமிர்னா சபை
## The Church of Smyrna

வெளிப்படுத்தின புத்தகம் வயது சென்ற அப்போஸ்தலானாகிய யோவானால் உபத்திரவத்தின் மத்தியில், முந்தினவரும் பிந்தினவருமாகிய இயேசு கிறிஸ்துவினால் உரைக்கப்பட்ட விசேஷ செய்தியாக எழுதப்பட்டது. நீரோ மன்னனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ரோமானிய பேரரசர் டொமிஷியனின் ஆட்சியின் போது எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த பேரரசன் சிமிர்னா சபை கிறிஸ்தவர்களை 10 ஆண்டுகள் மிகவும் துன்புறுத்தினான். அவனது துன்புறுத்தலில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுமாத்திரம் அல்ல அப்போஸ்தலானாகிய யோவான் கொதிக்கும் எண்ணெய்யில் போடப்பட்டும் கொதிக்கும் எண்ணெய்யிலும் யோவான் உயிர் பிழைத்தப் பிறகு பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டான். இந்த தீவில் இருந்த யோவான், "கர்த்தருடைய நாளில் நான் ஆவிக்குள்ளானேன்" என்று எழுதினான். அவன் சில அற்புதமான காட்சிகளைக் கண்டு, துன்புறுத்ததப்பட்டவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக அக்காட்சிகளை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறான்.

1. **சிமிர்னாவிலுள்ள சபை**க்கான நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை (வெளி.2:10): இச்சபையைப் பற்றி இயேசு குறையாக எதுவும் சொல்லவில்லை. எனவே இது குறைசொல்லப்படாத ஒரே சபையாக இருக்கிறது. இந்த சபையார் பணக்காரர்கள் அல்ல, அவர்கள் ஓரளவு வறுமையில் வாடினர். இதனால், அவர்கள் சுவிசேஷத்திற்கு தங்களை ஒப்படைக்க அதிக வாய்ப்பிருந்தது. சிமிர்னா என்பது ஆசியா மைனர் மற்றும் இப்போதுள்ள தெற்கு கடற்கரையில் இருந்த ஒரு நகரமாகும். இந்த சபைக்கு இயேசு கிறிஸ்து நித்திய ஜீவனக்கான நம்பிக்கையை வாக்குப்பண்ணுகிறார்.

2. **சிமிர்னாவிலுள்ள சபை**யார் உபத்திரவப்படுதல் (வெளி.2:9): டொமிஷியனின் எரிச்சல், இச்சபையின் இரண்டாவது துன்புறுத்தலில் ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டதால் கொல்லப்பட்டனர். ஆனால் இயேசுவின் செய்தியோ, பயப்படாதே, "முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது" என யோவானைக்கொண்டு எழுதினார் (வெளி.2:8). ஆம் தேவன் ஆதிமுதற்கொண்டு முடிவு மட்டும் நம்மைக்காண்கிறவராயிருக்கிறார். இச்செய்தியினை தேவன் இருந்தவரும், இருக்கிறவரும் வருகிறவருமான இயேசுவின் மூலம் அனுப்புகிறார். இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவர்கள் என்று நம்மை அறிவிக்கும்போது பல உபத்திரவங்கள் வரலாம், மரித்தவர் இன்றும் உயிருடனிருப்பதால் நம்மையும் உயிர்ப்பிக்க வல்லவர் என்பதை அறிந்து தைரியமாக இருக்கவேண்டும் (ஏசா.46:10).

3. **உன் கிரியைகளை** அறிந்திருக்கிறேன் எனக் குறிப்பிடுகிறார் (வெளி.2:9): ஆம் அவருக்கு மறைவானவை ஒன்றுமில்லை.

அவர் நாம் என்ன நினைக்கிறோம் என்பதை அறிகிறார். நாம் இருளில் என்ன செய்கிறோம் என்பதையும் அறிகிறார். நாம் அடைக்கப்பட்ட கதவுகளுக்குப் பின்புறம் என்ன செய்கிறோம் என்பதையும் அறிகிறார். நாம் அவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது. சங்.139 மற்றும் யோனா புத்தகத்தை வாசிக்கவும்.

**4. உன் உபத்திரவங்களை** அறிந்திருக்கிறேன் எனக் குறிப்பிடுகிறார் (வசனம் 9): நமது குறைபாடுகளின் உணர்வை அவர் அறிவார். நாம் எதிர்கொள்ளும் சோதனைகளை அவர் அறிவார். "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபி.4:15). நீங்கள் எங்கெல்லாம் இருக்கிறீர்களோ, அங்கே அவரும் இருக்கிறார்.

**5. உங்கள் தரித்திரத்தையும்** அறிவேன் என்கிறார் (வசனம் 9): அவர்களின் தரித்திரத்தை, வறுமையை அறிந்தார். ஆனால் அவர்கள் பணக்காரர்கள் என்று கூறுகிறார். அவர்கள் பொருட்களில் ஏழைகள், ஆனால் ஆவியில் பணக்காரர்களாக இருந்தனர். உலகப் பொருட்கள் நம்மிடம் அதிகம் இல்லாமலிருக்கலாம், ஆனால் சிமிர்னா சபையாரைப் போல ஆவிக்குரியவற்றில் செழுமையுள்ளவர்களாக, பணக்காரர்களாக இருப்பது மிகவும் நல்லது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**6. சாத்தானுடைய கூட்டமாய்** இருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிவேன் என்றார் (வெளி.2:9): யூதர்கள் என்று சொல்லியும் யூதரல்லாத சிலர் பழைய வழிகளைப் பின்பற்ற முயன்றனர். இப்போது யூதமதம் அல்லது யூதர்களின் கோட்பாடு செயல்படவில்லை. ஆனால் கிறிஸ்துவின் கோட்பாடுகளைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களை மீண்டும் யூத முறைமைகளுக்கு இழுக்கும்படி முயற்சித்தார்கள். இப்படிப்பட்ட யூதரல்லாத சாத்தானின் கூட்டத்தார் செய்யும் தூஷணமும் தமக்குத் தெரியும் என்று இயேசு கூறுகிறார்.

**7. சிமிர்னா சபை** பரிசுத்தவான்கள் துன்பத்தையும் உபத்திரவத்தையும் அநுபவித்தபோது பரிசுத்தவான்களாக தொடர்ந்து நிலைத்திருந்தார்கள் (வெளி.2:8-11): நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே என்கிறார். உபத்திரவத்திற்கோ, வறுமைக்கோ, யூதர்களின் தூஷணத்திற்கோ பயப்படாதீர்கள். "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்று கூறுகிறார். இச்செய்தி கிறிஸ்துவின் சபையில் இருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமானது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். கிரீடம் அன்றைய ரோமகலாச்சாரத்திலிருந்த ஸ்டெபனோஸ் கிரீடம், வெற்றியின் கிரீடம் ஆகியவற்றைக் குறிக்கிறது. எனவே இயேசு சொன்னதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

கிறிஸ்தவத்தின் இரண்டு நிலைகள்:

1. நரகத்திற்குச் செல்ல பயப்படுவார்கள்.

2. தேவனை மட்டும் நேசிப்பவர்கள்.

உங்கள் வழிகாட்டும் கொள்கை எதுவாயிருந்தாலும், வெற்றிக்கான பாதையை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஆனால் மரணபரியந்தம் நீங்கள் உண்மையாக இருக்கவேண்டும். விசுவாசம் என்பது ஞாயிற்று கிழமை மாத்திரம் இருப்பது அல்ல. விசுவாசம் என்பது கிறிஸ்துவுக்கு நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்த நம்மால் முடிந்து அனைத்தையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நம்மில் இருக்கவேண்டும் என்பதாகும்.

சிறுவர் பகுதி



# காதுள்ளவன் கேட்கக்கடவன்

வேத பகுதி: வெளி.3:6

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். அதே சமயத்தில் ஜனவரி முதல் தேதியில் மட்டும் விசேஷித்த ஜெபங்களை நாம் ஏறெடுப்போமானால் டிசம்பர் 31-ம் தேதிவரை நாம் விசேஷமாக ஜெபிக்கவில்லை என்று பொருள்படுகிறதே அதை எப்போதாவது நீங்கள் யோசித்ததுண்டா?

எனவே தேவனுடைய அன்பினாலும் கிறிஸ்துவின் கிருபையினாலும் ஜீவித்துக்கொண்டிருக்கிற நமக்கு ஒவ்வொரு காலைப்பொழுதும் பூத்துக்குலுங்கும் புதிய வருடங்கள்தான். நாட்களை விசேஷித்துக்கொள்பவர்களைப் பற்றி நமக்குப் பிரச்சனையில்லை. நமக்கு எல்லா நாட்களும் தேவனுடைய தயவால் கிடைக்கப்பெற்ற நாட்கள்தான்.

சரி, அது இருக்கட்டும் நம்ம மேட்டருக்கு வருவோம். அதென்ன தலைப்பில் "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று வேதம் வலியுறுத்துகிறது அப்படியானால் செவிடர்களுக்கு காது என்ற உருப்பே கிடையாதா? அல்லது செவிடரின் காதுகளையெல்லாம் பேதுருவைப்போல அறுத்து எடுத்துவிடலாமா? அப்படியல்ல அன்பரே, காது என்ற உறுப்பை தேவன் நமக்கு எதற்கு கொடுத்திருக்கிறார் என்று உணராத ஜென்மங்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்தத்தான், பரிசுத்த ஆவியானவர் இந்த வசனத்தை வெளிப்படுத்துகிறார்.

ஒரு பள்ளிக் கூடத்தின் நிர்வாகத்தினர் அதனுடைய ஆண்டுவிழாவிற்கு ஒரு மந்திரியை அழைத்தால் கௌரமாக இருக்கும் என்று ஒரு அமைச்சரிடம் தேதி கேட்டு பெற்றுக் கொண்டார்கள். அப்போது அமைச்சர் தன் பந்தாவை காட்டுவதற்காக அவர்களிடம் எனக்கு அதிகமான நிகழ்ச்சிகள் இருப்பதால் என் நேரத்தை வீணாக்காதீர்கள் நான் ரொம்ப பிசி என்று சொல்லி அனுப்பினார்.

அந்த நாளும் வந்தது அமைச்சர் வந்து அவசரமாக மேடை ஏறினார் அப்போது அவரிடம் பள்ளி நிர்வாகி ஒரு முக்கிய விஷயம் சொல்ல அவர் அருகில் நெருங்கினார் ஆனால் அதற்குள் அமைச்சர் சட்டென்று மைக்கை எடுத்துக்கொண்டு பேச ஆரம்பித்து விட்டார். உண்மையிலேயே கல்வியைப் பற்றி மிக நன்றாக ஒன்றை மணிநேரம் பேசி முடித்தார். யாருமே கைதட்ட வில்லை, பாராட்டும் தெரிவிக்கவில்லை. அமைச்சருக்கு கோபம் பள்ளி நிர்வாகியை அழைத்து என்ன இவ்வளவு நேரம் அருமையாக பேசினேன் யாருமே கைத்தட்டவில்லையே என்று கடுப்புடன் கேட்டார். நிர்வாகி சொன்னார்: ஐயா, இது செவிடர்பள்ளி அவர்களுக்கு காதுகேட்கும் கருவியை நாங்கள் வாங்கிவைத்திருக்கிறோம் அதை அவர்களுக்கு உங்கள் திருக்கரங்களால் வழங்கிவிட்டு அதன் பிறகு உங்களை பேசவைக்க இருந்தோம் அதற்குள் நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள். இங்கு மாணவர்களுக்கும் காதுகேட்காது ஆசிரியர்களுக்கும் காது கேட்காது என்றார். அமைச்சரின் முகத்தில் ஈயாட வில்லை. அசடு வழிந்து நின்றார். இப்படித்தான் வேத வசனத்தை கேட்பது போல் நடிப்பவர்களும், கேட்டும் அதன்படி நடவாமல் போகிறவர்களுக்கும், தன் வசதிக்கு ஏற்றார்போல போதிப்பவர்களுக்கும் காது இருந்தும் என்ன பயன்? அதே சமயம் அமைச்சரின் பேச்சை கேட்க ஆவலாய் இருந்தவர்கள் மத்தியில் தன் தற்பெருமையினால் கொடுத்த செய்தி அவர்களுக்குப் போய்ச்சேராமல் போனது. அதுபோல சில ஊழியர்கள் ஆவலாய் கேட்க காத்திருக்கும் விசுவாசிகளுக்கு வசனத்தின்படி போதிக்காமல் சொந்தக்கதை, சோகக்கதைகளினால் காலத்தை வீணாக்குகிறார்கள். ஊழியர்கள் இனிமேலாவது கூட்டத்தின் சூழ்நிலை அறிந்து நல்ல நிலத்தில் வசனத்தை விதைக்க முற்படுவார்களா?

**மனப்பாட வசனம்** **"வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" நீதிமொழிகள்.28:9**

## வேத அறிவுப் போட்டி எண்: 294

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் வேத அறிவுப்போட்டி எண்ணையும் குறிப்பிட்டு எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. சாயங்காலத்தில் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பையும் மீதியாக வைக்காததுமானவைகள் எவை?
2. பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா எப்படிப்பட்ட சற்குணராயிருக்கிறார்?
3. குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை என்று எந்த தீர்க்கனைக் கொண்டு பேசினார்?
4. யோவான்ஸ்நானனுடைய தலையை கேட்ட பெண் யார்?
5. நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன் அதை என்றைக்கே தருவேன் என்றார்?
6. எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு என்ன நடக்கும்?
7. உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
8. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் என்பவர் எவர்?
9. ஜீவிவிருட்சத்துக்குப்போம் வழியைக் கர்த்தர் காவல் செய்தாரா?
10. தியத்தீரா ஊரைச் சார்ந்த லீதியாளுடன் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்களா?

## வேதாகம ஆய்வு... 78

தெபொராள் - Deborah



1. தெபொறாள் என்றால் தேனீ என்று அர்த்தம்
2. இவள் ஒரு நியாயாதிபதி – நியா.4:4
3. தீர்க்கதரிசியாயும் இருந்தாள் – நியா.4:14
4. இவள் சிறந்த பாடகி – நியா.5:1
5. இஸ்ரவேலின் தாயாக எழுப்பப்பட்டாள் – நியா.5:7

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
February 2025

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்




- Our TV Program: Six Days of the Week
- *Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV*
- ***24 Hours Worldwide Web Twoc TV Channel***



YouTube : the word of christ

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

*Office Address*
***The Word of Christ,***
*D/5 Rajan Nagar*
*Batlagundu -624202,*
*DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**





Contact Us: 6379350509

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan